DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous CASE No: C.C. No. 399/12
Preliminary Register

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 5 |
| Name | : | Muthukumar |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.19

முதல் விசாரணை:

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சுரேஷ்குமாரைத் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் எனது பெரியம்மா மகன் பாண்டியராஜனுக்கு மதுரை தேனி சாலையில் சேம்பர் அருகில் விபத்து ஏற்பட்டு இறந்து போனது சம்பந்தமாக ஆய்வாளர் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து தயார் செய்த பார்வை மகஜரில் நானும் சாட்சி சுரேஷ்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அதசாஆ 2. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

விபத்து நடந்து சிறிது நேரம் கழித்து நான் மதுரையில் இருந்தபோது 7.30 மணி அளவில் தகவல் கிடைத்தது. எனக்கு என் பெரியம்மா மகள் தகவல் தெரிவித்தார். நான் இரவு 10.00 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்ததில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் விபத்து சம்பந்தமாக படம் வரைந்தது குறித்து எழுதியிருப்பதாக கூறினார்கள். நான்

அதனை படித்துப்பார்க்கவில்லை. என்னோடு சுரேஷ்குமாரும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்திட்டார் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எனக்கு வாகனவிபத்து பற்றி எதுவும் தெரியாது என்றும் விபத்தில் இறந்தவர் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

/Sd./ Muthukumar

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.